DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

C C No. 57/2017

Deposition of Witness : LW6 /PW5

| Name | அன்பழகன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | முத்தையன் | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 04.08.2023 | | | |

(A1 and A5 absent. Petition filed and allowed.)

சாட்சி புதுப்பேட்டை காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.ப. கஜேந்திரன் (Gr.I 2534) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை-**

1. நான் தற்போது பண்டரக்கோட்டை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 ஆகியோர்களை தெரியும். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விவரங்களும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து விசாரிக்க அனுமதிகோரியதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. இவ்வழக்கின் எதிரிகள் எனது ஊரைச்சேர்ந்வர்கள் என்ற வகையில் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், நான் போலிஸ் விசாரணையின்போது கடந்த 16.01.2017 அன்று மாலை 06.30 மணிக்கு எங்கள் தெருவில் வசிக்கும் எனது அண்ணன் வெங்கடேசன் அவரது மனைவி மலரும், வெளியில் சென்றுவிட்டு அவரது வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தபோது எனது அண்ணன் வெங்கடேசனின் எதிரில் வீட்டில் வசிக்கும் மணி என்பவர் எனது அண்ணன் வெங்கடேசனை பார்த்து அசிங்கமாக திட்டினார் என்றம், அதற்கு எனது அண்ணன் வெங்கடேசன் மனைவி மலர் ஏன் இப்படி அசிங்கமாக கேட்கிறார் என்று கேட்டதற்கு மணி மலரை அசிங்கமாக திட்டி அருகில் கிடந்த சவுக்கு தடியயை எடுத்து எனது அண்ணன் வெங்கடேசனை அடிக்க ஓங்கினார் என்றும், அப்போது மலர் என் புருஷ்னை ஏன் டா அடிக்கறீ என்று வெங்கடேசனை தள்ளவிட அந்த அடி மலரின் வலது தோள்பட்டையில் விழுந்தது என்றும், உடனே மலர் மணியை பார்த்து ஏன் டா என் கணவரை வம்பு வாங்கிறீங்க வீட்டிற்கு போங்கடா என்ற சொல்லிக்கொண்டிருக்கும்போது மணிக்கு சப்போட்டாக எங்கள் ஊரைச்சேர்ந்த அரசு, சிலம்பு, கோவிந்தன், ஆறுமுகம் ஆகியோர்கள் மலரை பார்த்து

அசிங்கமாக திட்டி உங்களை இங்கே கொலை செய்து போட்டுவிடுபோம் என்று சொல்லி எனது அண்ணன் வெங்கடேசனையும், மலரை தங்களை கையில் வைத்திருந்த தடியால் அடித்தனார் என்றும், அவர்கள் வலி தாங்காமல் சத்தம்போடவே அதை கேட்க அங்கு வந்த எனது அண்ணன் வெங்கடேசன் மகன் சந்திரசேகரை அரசு அசிங்கமாக திட்டி வலது முழுங்களையில் தடியால் அடித்தார் என்றும், உடனே அவர்கள் அனைவரும் சத்தம்போடவே வெங்கடேசன் மாமியார் கிளியம்மாள் வந்து ஏன் டா என் மகளையும், எனது மருமகனையும், பேரனையும் இப்படி அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு அரசு , மணி இருவரும் கிளியம்மாளை அசிங்கமாக திட்டி இத்தாலே அடித்து கொல்லனும் என்று சொல்லி கிளியம்மாளின் பின் மண்டையிலும், மூங்கிலும் அடித்தார்கள் என்றும், உடனே அங்கிருந்த நானும், எங்கள் ஊர்க்காரர்கள் விலக்கிவிட அனைவரும் தங்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களுடன் அங்கிருந்து ஓடி விட்டனர் என்றும், உடனே வெங்கடேசனும், அவரது மகனும், மலரையும் கிளிம்மாளையும் ஒரு போக்கு வண்டியில் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும், போலிசார் விசாரிரணையில் எனது அண்ணன் வெங்கடேசனுக்கும், சந்திரசேகருக்கும் வெளிக்காயம் எதும் இல்லாததால் மருத்துவமனைக்கு சிகிச்சை மேற்கொள்ளவில்லை என்று கேள்வி ப்பேட்டேன் என்று சொல்லியுள்ளேன் எனற்ால் சரியல்ல. அவ்வாறு, போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமாவர்கள் என்பதால் அவர்களை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக அரசுதரப்பு சாட்சியத்திலிருந்து விலகி, பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**- இல்லை

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

C C No. 57/2017

Deposition of Witness : LW5 /PW4

| Name | டில்லி அழகன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | சாமிநாதன் | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **04.08.2023** | | | |

(A1 and A5 absent. Petition filed and allowed.)

சாட்சி புதுப்பேட்டை காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.ப. கஜேந்திரன் (Gr.I 2534) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை-**

1. நான் தற்போது பண்டரக்கோட்டை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 , 6 ஆகியோர்களை தெரியாது. இவ்வழக்கின் எதிரிகளை தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விவரங்களும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து விசாரிக்க அனுமதிகோரியதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், நான் போலிஸ் விசாரணையின்போது கடந்த 16.01.2017 அன்று மாலை 06.30 மணிக்கு எங்கள் தெருவில் வசிக்கும் வெங்கடேசனும், அவரது மனைவி மலரும், வெளியில் சென்றுவிட்டு அவரது வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தபோது வெங்கடேசனின் எதிரில் வீட்டில் வசிக்கும் மணி என்பவர் வெங்கடேசனை பார்த்து அசிங்கமாக திட்டினார் என்றம், அதற்கு வெங்கடேசன் மனைவி மலர் ஏன் இப்படி அசிங்கமாக கேட்கிறார் என்று கேட்டதற்கு மணி மலரை அசிங்கமாக திட்டி அருகில் கிடந்த சவுக்கு தடியயை எடுத்து வெங்கடேசனை அடிக்க ஓங்கினார்என்றும், அப்போது மலர் என் புருஷ்னை ஏன் டா அடிக்கறீர்கள் என்று வெங்கடேசனை தள்ளிவிட அந்த அடி மலரின் வலது தோள்பட்டையில் விழுந்தது என்றும், உடனே மலர் மணியை பார்த்து ஏன் டா என் கணவரை வம்பு வாங்கிறீங்க வீட்டிற்கு போங்கடா என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது மணிக்கு சப்போட்டாக எங்கள் ஊரைச்சேர்ந்த அரசு, சிலம்பு, கோவிந்தன், ஆறுமுகம் ஆகியோர்கள் மலரை பார்த்து அசிங்கமாக திட்டி உங்களை இங்கே கொலை செய்து போட்டுவிடுவோம் என்று சொல்லி வெங்கடேசனையும், மலரை தங்களை கையில் வைத்திருந்த தடியால் அடித்தனார் என்றும், அவர்கள் வலி தாங்காமல் சத்தம்போடவே

அதை கேட்க அங்கு வந்த வெங்கடேசன் மகன் சந்திரசேகரை அரசு அசிங்கமாக திட்டி வலது முழுங்களையில் தடியால் அடித்தார் என்றும், உடனே அவர்கள் அனைவரும் சத்தம்போடவே வெங்கடேசன் மாமியார் கிளியம்மாள் வந்து ஏன் டா என் மகளையும், எனது மருமகனையும், பேரனையும் இப்படி அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு அரசு, மணி இருவரும் கிளியம்மாளை அசிங்கமாக திட்டி இத்தாலே அடித்து கொல்லமுனும் என்று சொல்லி கிளியம்மாளின் பின் மண்டையிலும், மூங்கிலும் அடித்தார்கள் என்றும், உடனே அங்கிருந்த நானும், எங்கள் ஊர்க்காரர்கள் விலக்கிவிட அவனைரும் தங்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களுடன் அங்கிருந்து ஓடி விட்டனர் என்றும், உடனே வெங்கடேசனும், அவரது மகனும், மலரையும் கிளிம்மாளையும் ஒரு போக்கு வண்டியில் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும், போலிசார் விசாரிரணையில் வெங்கடேசனுக்கும், சந்திரசேகருக்கும் வெளிக்காயம் எதும் இல்லாததால் மருத்துவமனைக்கு சிகிச்சை மேற்கொள்ளவில்லை என்று கேள்வி ப்பேட்டேன் என்று சொல்லியுள்ளேன் எனற்ால் சரியல்ல. அவ்வாறு, போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எனக்கு மட்டும் தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக அரசுதரப்பு சாட்சியத்திலிருந்து விலகி, பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**- இல்லை